சட்டம் ஒழுங்கைப் பேணி காப்பதில் காவல் துறை சிறப்பாக செயல்படுகிறது!

சங்கராபுரத்தில் கலை - அறிவியல் கல்லூரி அமைத்திடுக!

சட்டப்பேரவையில் சங்கராபுரம் தா. உதயசூரியன் கோரிக்கை!

சென்னை, மே. 1 - சட்டமன்றத்தில் சங்கராபுரம் தொகுதி உறுப்பினர் தா. உதயசூரியன் காவல் துறை மானியக் கோரிக்கை குறித்து பேசுகையில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் சங்கராபுரம் தொகுதி உறுப்பினர் தா.உதய சூரியன் பேசியதாவது

ஈரோட்டு பகலவன் தந்தைப் பெரியார் அவர்களை வணங்கி, காஞ்சித் தலைவன் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை உருவாக்கித் தந்து கழகத் தோழர்களுக்கு மட்டுமல்லாமல், காவல் துறைக்கும் இந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருக்கின்ற நல்ல சொற்களோடு உருவாக்கித் தந்த அண்ணா அவர்களுக்கும் புகழ் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீசாரினுடைய நலனைக் கருதி அவர்களுடைய குடும்ப சூழ்நிலையைக் கருதி போலீசுக்கு என்று கமிஷன் அமைத்த கோபாலாசாமி ஐயங்கார், சபாநாயகம், பூர்ணலிங்கம் போன்ற 3 கமிஷன்களை உருவாக்கித் தந்த ஐயா கலைஞருக்கு புகழ் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) நான்காவது போலீஸ் கமிஷனாக சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களுடைய பேரன் எஸ்.டி. செல்வம் அவர்கள் தலைமையிலே நான்காவது கமிஷனை அமைத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

காவல் துறையில், விளையாட்டுத் துறையில் இருக்கின்ற வீரர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்க வேண்டுமென்று 100 பேருக்கு அந்த வேலை வாய்ப்புகளை சென்ற ஆண்டு வழங்குகின்றபோது அதிலே 11 துணைக் காவலர்களை நியமித்து இருந்தாலும், தற்போது உதவி ஆய்வாளர்கள் 33 பேரையும், எதிர்காலத்தில் 2 ஆம் நிலைக் காவலர்களையும், விளையாட்டுத் துறை மேலாண்மை ஆணையத்தின் மூலமாக மனுக்களை வாங்குகின்ற நிகழ்வுகளை உருவாக்கித் தந்த துணை முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அவை முன்னவர் அவர்கள், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய பொறுப்பு அமைச்சர் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், வேங்கை மைந்தன் அண்ணன் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் உள்ளிட்ட மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், துணை சபாநாயகர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2026 ஆம் ஆண்டு வாக்கு கேட்கின்றபோது என்னுடைய பெயரை சொல்லி தான் நீங்கள் வாக்கு கேட்க வேண்டும். ஆகவே, கொடுக்கின்ற மணித் துளிகளில் ஒரு 4 மணித் துளிகள் சேர்த்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, 2026 ஆம் ஆண்டு தேர்தலின்போது என் பெயரை சொல்லிதான் வாக்கு கேட்க வேண்டும். ஆகவே, கொடுக்கின்ற மணித் துளிகளில் ஒருசில மணித் துளிகள் சேர்த்துத் தர வேண்டுமென்று பணிவோடு உங்களைக் கேட்டு, உங்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டின் பாதுகாப்புக் காகவும், சமுதாயத்தின் பாதுகாப்புக்காவும். . .

சமுதாயத்தில் நல்லொழுக்கம் ஒளிவிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், . . .

சட்டம் ஒழுங்கில் சிறப்பான ஆட்சி!

தற்போதைய திராவிட மாடல் ஆட்சியில், காவல் துறையில் பணிபுரிகின்ற முதல் நிலையிலான தலைவர் முதற்கொண்டு, கடைசி நிலையிலுள்ள constable வரை, புலனாய்வுத் துறையிலும், சட்டம் ஒழுங்கிலும் சிறப்பாக இருப்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை எடுத்துவைப்பதற்கு முன்பாக, ஒரு நிகழ்வைக் கூற விரும்புகிறேன்.

Police Commissionஐ 1962 ஆம் ஆண்டில் எங்கள் அய்யா கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது, என்னுடைய பெயரிலேயே 'உதய சூரியன்' என்று ஒரு நாடகம் போடப்பட்டு அதற்கு தடை விதிக்கப்பட்டது. காவல் துறையின் நலனைக் கருதி, அந்நாடகத்தில் ஒரு பாடல் வரும். அந்தப் பாடலை அய்யா கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டிலும், 1989 ஆம் ஆண்டிலும், 1996 ஆம் ஆண்டிலும் பேரவையில் பாடிக்காட்டிய நிகழ்வுகள் உண்டு. தற்போது பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் அதனை முன்வைக்க விரும்புகிறேன்:

"ஆராரோ, ஆரீராரோ!
ஆணழக கண்வளராய்
அஞ்சு பத்து சம்பளத்தில்
மிஞ்சுவதில்
வளரவந்த அஞ்சுகமே
கண்வளராய்!
போலீஸு வேலைக்கு
போகின்ற ஒங்கப்பனுக்கு
புத்திரனாய் வந்து
உதித்த தரித்திரமே
துப்பாக்கி எடுத்துகிட்டு
போகின்ற ஒங்களிடம்
பழம் பாக்கி கேட்டு
கிட்டு வழிமறிக்கும்
கடன்காரர் வருகின்ற
காட்சியெல்லாம்
காணாமல் கண் வள
ராய்!
நாடு ஆளும் மந்திரிகள்
ஒலியாமல் வாழ்வதற்கு
ஓடாக தேய்கின்ற அப்
பாவின் புத்திரரே!
குருவி கூடான
வீட்டுக்குள்ளே தவழுகின்ற
குலவிளக்கே!
கொசு கடிக்கு அஞ்சா
மல் குவளை மலர் கண்வள
ராய்,
காக்கி உடை போட்டு
கிட்டு, செவப்பு தொப்பி
மாட்டிக்கிட்டு,
நாட்டைக் காக்கும் வீர

னுக்கு, உன்னை போல்
நாலு வந்து
பிறந்துவிட்டால்!
காவி உடை வேண்டு
மடா, கமண்டலமும்
தேவையடா!
கண்மணியே, கள்வள
ராய்!

என்று பாடியதன் அடிப்படையில்தான், காவல் துறைக்கு 3 commissionsஐ அமைத்துக் காட்டிய பெருமை அய்யா கலைஞர் அவர்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட சூழ்நிலையில், காவல் துறைக்கு பல்வேறு சிறப்பு பயிற்சிகளையும், புலனாய்வுத் தறையில் முடிக்கிவிடுகின்ற பல்வேறு நிகழ்வுகளையும் உருவாக்கிக் காட்டிய பெருமை முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. அதற்கான ஒன்றிரண்டு சான்றுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

33 நாட்களுக்கு முன்பு, chain பறிப்புகூட்டமொன்று தமிழகத்தில் Palwal மாவட்டத்திலிருந்தும், Mewat மாவட்டத்திலிருந்தும், Rajasthan, Haryana போன்ற பகுதிகளிலிருந்து கொள்ளையர்கள் விமானம் மூலமாகவும், இரயில்கள் மூலமாகவும் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவி வருகை தந்து, காலை 6.00 மணி, 6.30 மணியளவில் பொதுமக்கள் கால் நடைப் பயிற்சி செய்கின்றபோதும், கடைகளுக்குச் செல்கின்றபோதும் கொள்ளையடிப்பதில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கின்ற நிகழ்வுகள் உண்டு. காலையில் 6.30 மணிக்கு சென்னை காவல் துறை Commissionerக்கு ஒரு தகவல் வருகிறது, "ஒரு கும்பல் chain பறிக்கின்ற நிகழ்வில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கின்றனர்" என்று சொன்னவுடன், கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட ரோந்துப் பணியில் இருந்தவர்கள் முடிக்கிடிவிடப்பட்டு, 3.30 மணி நேரத்தில் அந்தத் திருடர்களைப் பிடித்த பெருமை, நம்முடைய காவல் துறைக்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புலனாய்வுத் துறை எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கு சான்றாக ஒரு எடுத்துக்காட்டை சொல்ல விரும்புகிறேன். அவர்கள் திருடர்களை எப்படி பிடித்தார்கள் என்றால், இரண்டு காவல் அதிகாரிகள் விமானத்தில் செல்கிறார்கள், CCTV cameraவை ஆராய்ந்து பார்க்கிறார்கள். ஏற்கெனவே திருட்டு வழக்குகளில் ஈடுபட்டிருந்தோர்களின் புகைப்படங்களிலுள்ள அங்க அடையாளங்களைப் பார்க்கிறார்கள். அதனடிப்படையில், உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை பார்க்கிறார்கள். அவ்வாறு அடையாளங்களை வைத்து கண்டுபிடிக்கப்பட்டவர்கள் எங்கே செல்வார்கள், ஒன்று இரயில்வே நிலையத்திற்கு செல்ல வேண்டும் அல்லது விமான நிலையத்திற்கு செல்ல வேண்டும் என்று அதனடிப்படையில் விமான நிலையத்தில் பணியிலிருந்த அதிகாரிகளிடம் திருடர்களின் அங்க அடையாளங்களை எடுத்துச் சொல்லி, அது போன்று யாராவது வந்திருக்கிறார்களா என்றும், அவர்களது புகைப்படங்கள் இருப்பதாகக் கூறி புகைப்படங்களை அவர்களுக்கு அனுப்பி கண்டுபிடிக்கச் சொன்னதன் அடிப்படையில், ஒருவர் விமானத்திற்கே சென்றுவிட்டிருந்தார், ஒருவர் டிக்கெட் கிடைக்காமல் விமான நிலையத்தில் இருந்தார், மேலும் ஒருவர் ஆந்திர மாநிலத்தை நோக்கி, புகைவண்டியின் மூலம் கிளம்பிச் சென்றுவிட்டார்.

இத்தகவல்களை 3.30 மணி நேரத்தில் சேகரித்து, இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலேயே இல்லாத அளவில், தமிழ்நாட்டில் விமானம் புறப்படுகின்ற நேரத்தில், விமானத்தை நிறுத்தி, விமானத்தில் இருந்த அத்திருடர்களைப் பிடித்த பெருமை, தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சியின் காவல் துறைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் திருடர்களை எப்படிப் பிடித்தார்கள் என்றால், உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அவர்களை CCTV cameraவில் பார்த்து, ஆராய்ந்து பார்த்த போது முகத்தைப் பார்த்தார்கள், அவர்கள் அணிந்திருந்த உடையைப் பார்த்தார்கள், காலில் அணிந்திருந்த காலணியைப் பார்த்தார்கள்.

ஆகவே, உடையை மாற்றுவார்கள் என்கிற காரணத்தினால், காலணியை உதாரணமாகக் காட்டி அவர்களைப் பிடிக்கின்ற சூழ்நிலை விமானத்தில் செல்கின்றபோது, அங்கிருக்கின்ற பிற பயனாளிகள் எல்லாம், passengers ஏன் போலீஸ் இப்படி வந்து பிடிக்கிறீர்கள். தொந்தரவு செய்கிறீர்கள் என்று தகராறு செய்கிறார்கள். அப்படி தகராறு செய்கிறபோது, போலீஸ் புகைப்படங்களைக்காட்டி, இதோ இவன் காலிலே shoe அணிந்திருக்கிறான். இவன்தான் அந்தத் திருடன் என்று சுட்டிக்காட்டியதன் அடிப்படையில், அவர் அதற்குப் பின் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில், அந்தத் திருடனைப் பிடித்து விமானத்தைவிட்டு வெளியே கொண்டு வருகிறார்கள். அதற்குப் பிறகு, வினமான நிலையத்திலிருந்து இன்னொருவர் கைது செய்யப்படுகிறார். இன்னொரு முறை புகைவண்டியிலே இரயில்வே போலீசாருக்கு எடுத்துச்சொல்லி, ஆந்திராவில் ஒரு திருடன் கைது செய்யப்படுகிறான். இப்படி 3 திருடர்களை சுமார் மூன்றரை மணி நேரத்தில் கைது செய்யப்பட்ட வரலாறு, புலனாய்வுத் துறை மிகச் சிறப்பாக செயல்படுகின்ற காரணத்தினால்தான், திருடர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன். கோவலன் சிலம்பை விற்கப் போகிறார். தேவியாருடைய சிலம்பு பழுதடைந்துவிட்டதாக அரசுப் பொற்கொல்லனிடம் வருகிறது. அரசுப் பொற்கொல்லனிடம் வந்த சிலம்பைக் கொண்டு வந்தவரே எடுத்துச்செல்கிறார். இது பொற்கொல்லனுக்குத் தெரியாது. ஆனால், சிறிது நேரத்திற்கு பின்னர் சிலம்பு காணாமல் போய்விடுகிறது. ஆகவே, மன உளைச்சலாக இருந்த பொற்கொல்லன் புலம்பிக்கொண்டிருந்த நேரத்தில், கண்ணகியின் ஒரு சிலம்பை எடுத்துச் சென்று விற்று, வியாபாரம் செய்வதற்காக வந்தபோது, மதுரை மாநகரில் தெருத் தெருவாக அலைகிறார் கோவலன். இது விலைமதிக்க முடியாத சிலம்பு. இந்தச் சிலம்பை வாங்குவதற்கு ஒரு இடம் தான் இருக்கிறது. அரண்மனை பொற்கொல்லன் தான் இந்தச் சிலம்பை வாங்கிக்கொள்வார். அவரைச் சென்று அணுகுங்கள் என்று சொன்னபோது, கோவலன் சிலம்பை எடுத்துகொண்டு பொற்கொல்லனிடம் செல்கிறார். ஏது இந்த சிலம்பு என்று பொற்கொல்லன் கோவலனைப் பார்த்து கேட்கிறார். அது தேவையில்லாத வேலை. சிலம்பை எடுத்துக்கொண்டு பணத்தைத் தாருங்கள் என்று சொன்னபோது, காலவர்களிடம் சொல்லி, இதுகுறித்து மன்னனிடம் தெரிவித்து, மன்னன் கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக என்று ஒரே வரியில் சொல்லிவிடுகிறார். மீண்டும் இங்கிருந்து கோவலனை, கொலை களத்திற்கு காவலர்கள் அழைத்துச் செல்கிறார்கள். அப்போது போலீஸ் இல்லை. அந்த மூன்று காவலர்களில் ஒரு காவலர் சொல்கிறார்.

'பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட
இலக்கண முறைமையின்
இருந்தோன் ஈங்கிவன்
கொலைப்படும் மகனலன்'

என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாடுகின்ற பாடல் இருக்கிறது. கோவலன் கள்வன் அல்ல. நல்லவனுக்குரிய இலக்கண முறைமையோடும் இருக்கின்றான். இங்கு இருக்கும் இவன் களவாடி, கொலை செய்யப்படுவதற்குரிய மகன் அல்லன் என்றனர் காவலர்கள். கள்வர்களை அறிவதில், காவலர்கள் அரிய ஆற்றல் படைத்தவர்கள் என்று சிலப்பதிகாரத்திலே சொல்லப்படுகின்ற நிகழ்வு உண்டு.

சென்னை கமிஷனருக்கு ஒரு சல்யூட்!

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அலசி ஆராய்ந்து பார்த்து, விமான நிலையத்தில் கள்வர்களை கண்டுபிடித்த போலீசார். தமிழ்நாடு போலீசார்தான். அந்தக் காலத்திலேயே காலிலிருந்த சிலம்பைத் திருடியது, கோவலன் அல்ல என்பதை அப்போதே காவலர்கள் சுட்டிக்காட்டியதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டுகிறேன். அப்படி காலணியைக் கண்டுபிடித்து, கள்வரைக் கண்டுபிடித்த சென்னை Commissioner அவர்களுக்கு ஒரு saluteஐ இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, ATM cardல் கொள்ளையடித்துச் செல்கின்ற நிகழ்வு உண்டு. பல்வால், மேவாட், ஹரியானா, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், ஆந்திரா மற்றும் கேரளா இதுபோன்ற இடங்களில் கொள்ளையடிப்பதை இவர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அப்படி கொள்ளையடித்துக் கொண்டிருக்கிற இந்த வழக்கமான சூழ்நிலையில், கேரள மாநிலத்தில், திருச்சூர் என்ற இடத்திலிருந்து ரூ.65 இலட்சம் பணத்தை ATM cardலிருந்து கொள்ளையடித்துச் சென்று தப்பித்து விட்டார்கள். உடனே, அங்கு இருக்கின்ற SP இளங்கோவன் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அவர் நாமக்கல்லில் இருக்கிற SP ரஜேஷ் கண்ணா அவர்களிடம் தொடர்பு கொண்டு, இதுபோன்று திருடர்கள் ATMல் கொள்ளையடித்துவிட்டு, north Indian வருகிறார்கள். எனவே, நீங்கள் பக்கதில் இருக்கிற இடங்களையெல்லாம், ஆய்வு செய்ய வேண்டும் என்று ஓர் உத்தரவு வருகிறது.

அந்தத் தகவலின் அடிப்படையில் 5¾க்கால் மணிக்கு தகவல் வருகிறது. 5¾க்கால் மணிக்கு தகவல் வந்தவுடன் எல்லா போலீஸாரையும் அனுப்பிவிட்டு, எப்போதும் இரவு நேரத்தில் ரோந்து பணியிலிருக்கும் போலீஸார் ஓய்வில் இருப்பார்கள். ஆனால், ஓய்வையேப் பார்க்காமல் திராவிட மாடல் அரசினுடைய காவலர்கள் 5¾க்கால் மணிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் ஏற்கெனவே 2021ல் திருவண்ணாமலையில் 4, 5 இடங்களில் ATM கொள்ளையில் ஈடுபட்டு, பல்வால், மேவாட் ஆகிய இடங்களில் சென்று அவர்களைக் கண்டுபிடித்த காரணத்தினால், அவர்கள் containerல் வருவார்கள். containerஐ காரில் ஏற்றுவார்கள்.

ஒருவர் கொள்ளையடித்து, மற்றவரிடம் கொடுத்து அதைச் சேமித்து வைப்பார்கள் என்ற நிலைமையெல்லாம் தெரிந்து கொண்ட காவல் துறையினுடைய SP அவர்கள், வருகின்ற containerகளையெல்லாம் ஒவ்வொன்றாக check செய்யும்போது, north Indian, வடநாட்டினுடைய registration கொண்ட container ஒன்று வருகிறது. அது ஒரு காரிலே இடிக்கப்படுகிறது. அந்தக் காரில் இருப்பவருக்கு உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. Two wheeler ஒருவர்மீது ஏற்றப்படுகிறது.

இதையெல்லாம் பார்த்தபிறகு அந்த containerஐ துரத்தி பிடிக்கிறார்கள். அதிலே ஒரு driver மற்றும் 3 நபர்கள் இருந்தார்கள். மீதமுள்ளவர்கள் container உள்ளே இருந்திருக்கிறார்கள். சத்தம்கேட்டு உடனே, containerஐ நிறுத்தி, திறந்து பார்க்கும்போது,

அந்த containerக்குள் ஒரு car இருந்திருக்கிறது. அப்போது, ஒரு திருடன் ரூ.65 இலட்சம் ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டு, தன்னிடமிருந்த கம்பியினால், ஒரு காவல் ஆய்வாளரைத் தாக்கிவிட்டு, தப்பித்து ஓடுகிறான். அவனை மீண்டும் மடக்கிபிடித்து, அவனிடமிருந்து ரூ.65 இலட்சம் ரூபாயை பறிமுதல் செய்து, அதனை குமாரபாளையம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கிறார்கள். அவர்களில் ஒருவர் காவல்துறையினரைத் தாக்கிதால், அவர் மட்டும் சுடப்படுகிறார். மற்றொருவருக்கு சுடப்பட்டதால் கால் போய்விடுகிறது. மீதமுள்ள ஐந்து நபர்கள் காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் ஐவர் மீதும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 307 மற்றும் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர்கள் இதுவரையில் சிறைச்சாலையில் இருக்கின்ற பெருமை உண்டு. கேரளாவில் இவர்களைப் பிடித்தார்கள். அவர்களை கைது செய்ய முடியவில்லை. அப்படியே கைது செய்தாலும், ஜாமீன் பெற்றுவிடுகிறார்கள். கர்நாடகாவில் கைது செய்கிறேன் என்று சொல்கிறார்கள்.

ஆனால், ஜாமீன் பெற்றுவிடுகிறார்கள். மகாராஷ்டிரா உள்ளிட்ட பல மாநிலங்களில் இவர்களை கைது செய்கிறார்களே தவிர, ஆனால் அவர்கள் ஜாமீனில் வெளிவந்துவிடுகிறார்கள். ஆனால், கைது செய்யப்பட்ட சுமார் 30 நாட்களுக்குள் அதற்கான குற்றப்பத்திரிகையும் தயார் செய்யப்பட்டு, சாட்சியங்களையும் விசாரிக்கின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சியில் காவல் புலனாய்வுத் துறையில் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால், அந்த காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் ஒரு சல்யூட் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலனாய்வுத் துறையிலும் சரி, சட்டம் ஒழுங்கைப் பேணிக் காப்பதிலும் சரி, திராவிட மாடல் ஆட்சியில் சிறப்பாக செயல்படுகின்ற இந்த காவல் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரை, ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லிவிட்டு, மீதியை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதை சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கு அனுப்பி, அதை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சின்னசேலத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க 35 சென்ட் இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த ஆண்டே அதனை முதலமைச்சர் அவர்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைவாக, நான் ஐயா கலைஞர் பெயரை சொல்லுவதாக இருந்தாலும், முதலமைச்சர் பெயரை சொல்லுவதாக இருந்தாலும், மன்னிக்க வேண்டும், இருந்தாலும், நீங்கள் எடுத்துவிடலாம். 1971-1976 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தினுடைய கவர்னராக இருந்தவர் கே.கே. ஷா. கே.கே. ஷா என்று சொன்னால், கலைஞர் கருணாநிதி ஷா என்று அவரே சொல்லுவார். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் எந்த ஷா ஆக இருந்தாலும், எங்கள் தலைவரை A ஆக இருந்தாலும், B ஆக இருந்தாலும், C ஆக இருந்தாலும், D ஆக இருந்தாலும், E ஆக இருந்தாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்தநேரத்தில் பணிவோடு எடுத்துச் சொல்லி, எங்களுக்கு இளம் பிராயத்திலே தளபதி அவர்கள் சொல்லுவார்கள். 'Do or die', செய் அல்லது செத்து மடி. கட்டிய நாய்கள் மட்டுமல்ல எட்டிய மட்டும் பாய்வதற்கென்று இளம் இரத்தத்தில் எங்களை ஊட்டித் தந்தவர் என்னுடைய முதலமைச்சர் அவர்கள்.

ஆகவே, எங்கள் முதலமைச்சர் அவர்கள் இறுதி மூச்சு வரை செய், இறுதி வரை முயற்சி செய், இறுதி வரை உழைத்துக் கொண்டே இரு, இறுதிவரை, நம் இனம் காக்கும் போரில் போராடும், வென்றுகாட்டும் என்று சொன்ன முதலமைச்சர் அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்கி தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! நான் ஏற்கெனவே சென்ற கூட்டத்தொடரில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக சொன்னேன். அடுத்தமுறை சட்டமன்றத்திற்கு வருகின்ற போது, 40 இடங்களோடு, நாடாளுமன்றத்திற்கு நாங்கள் உள்ளே வருவோம் என்று சொன்னோம். அதேபோல, இந்த நிதிநிலை அறிக்கை ஐந்தாவது முறையாக காவல் துறை மானியக் கோரிக்கை நடைபெறுகிறது.

அடுத்த, காவல் துறை மானியக் கோரிக்கை வருகின்ற போது, திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியோடு சேர்த்து 200 இடங்களோடு, இந்த சட்டமன்றத்திற்கு வருவோம், வருவோம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

தொகுதிக் கோரிக்கைகள்: சின்னசேலம் ஏரிக்கு கோமுகி அணையிலிருந்து கடத்தூர், தெங்கியாநத்தம், தென்செட்டியந்தல், பைத்தந்துறை வழியாக நீர் செல்வதற்கு இரண்டு கிலோ மீட்டர் வாய்க்கால் வனத்துறைக்கு நடுவில் செல்வதால் அதனை வனத்துறை உதவியுடன் சீர்செய்து ஏரிக்கு நீர் தடையின்றி செல்வதற்க்கு வழிவகை செய்து தர வேண்டும்.

கலை கல்லூரி அமைத்திடுக!

சங்கராபுரத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்து தர வேண்டும்.

சங்கராபுரம் மற்றும் வடக்கனந்தல் பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்து தர வேண்டும்.

கல்வராயன்மலையில் 110KV துணை மின் நிலையம் அமைத்து தர வேண்டும்.

சின்னசேலம் பேருராட்சி அம்சாகுளம் முதல் ரயில்வேகேட் வரை சாலையின் இருபுறமும் கழிவுநீர் வடிகால் வாய்க்கால் அமைத்து தர வேண்டும்.

சின்னசேலம் சார்பு நீதிமன்றம்

சின்னசேலம் மற்றும் கல்வராயன்மலையில் சார்பு நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைத்து தர வேண்டும்.

இவ்வாறு உதயசூரியன் பேசினார்.

தருமபுரி கிழக்கு மாவட்டம் தருமபுரி நகராட்சியில் நடைபெற்ற கல்லூரி விழாவில் மாவட்டத்தின் மூத்த பத்திரிகையாளர் முரசொலி மணி அவர்களுக்கு பத்திரிக்கை துறையின் சிறந்த ஜகானிக் விருதினை தருமபுரி நகர மன்ற தலைவர் லட்சுமிமாது மற்றும் தருமபுரி நகர கழக செயலாளர் நாட்டான் மாது ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் கல்லூரி தாளாளர், காவல்துறை உதவி ஆய்வாளர் சரவணன் மற்றும் 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் நகரில் ஏற்படும் வாகன போக்குவரத்து நெரிசலை குறைக்க திருப்பத்தூர் நகர புறவழிசாலை பணிக்கு திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் அரசு துறை அதிகாரிகள், மாவட்ட பிரதிநிதி.எம். இராஜேந்திரன், ஆவின் இயக்குனர் பி. ஆர்.சின்னபையன், ஊராட்சி மன்ற துணை தலைவர்.ஏ.பி.பழனிவேல், ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், கழக தோழர்கள், பெண்கள் என பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.